**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம், (இ) ஸ்ரீவில்லிபுத்தூர்**
**முன்னிலை :– திரு.க.ஜெயக்குமார், பி.எல்., எல்.எல்.எம்.,**
**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி**
**விருதுநகர் மாவட்டம், (இ) ஸ்ரீவில்லிபுத்தூர்**

**2024 ம் ஆண்டு ஜூலை திங்கள் 05–ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**இ.ம.எண்.2/2024**
**இன்**
**அசல் வழக்கு எண்.38/2023**

1)G.கிருஷ்ணவேணி
2) G. தீபக்
3)G. தீபிகா ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
/எதிர்/
K.S.இராமசுப்பிரமணியராஜா ... எதிர்மனுதாரர் / வாதி

இம்மனு 19.06.2024–ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.M.ராஜசிம்மன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.சங்கர்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

தாவா அசல் வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக 04.07.2023–ம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை (Exparte)ரத்து செய்து அசல் வழக்கினை மீண்டும் கோப்பிற்கு எடுத்து மேல்நடத்த உத்தரவிட வேண்டி மனுதாரர்களால் இம்மனு

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9, விதி 7 மற்றும் பிரிவு 151– ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u>:–

2)இந்த மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் 1ம் பிரதிவாதி ஆவார். 2,3 மனுதாரர்கள் தனது குழந்தைகள். இந்த எதிர்மனுதாரர்/வாதி தன் மீதும் தனது குழந்தைகள் மீதும் சமூகம் நீதிமன்றத்தில் புரோநோட்டுகள் கடனுக்காக வழக்க தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இறுதியாக 04.07.2023–ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ள சமயத்தில் தனது குழந்தைகளுக்கு உடல்நலம் சரியில்லாமல் போனதால் வெளிமாநிலத்தில் தனது உறவினர்கள் உதவியுடன் மருத்துவ சிகிச்சை அளித்து வந்ததால் தனது வழக்குரைஞர் அவர்களை தொடர்பு கொள்ள முடியவில்லை. தற்போது தான் தாவா வழக்கு சம்பந்தமாக வேறு வழக்குரைஞர் மூலம் நீதிமன்றத்தில் விசாரித்து பார்த்ததில் தாவா அசல் வழக்கில் 04.07.2023–ம் தேதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பித்துள்ளதாக கூறினார்கள். தற்போது தான் தாவா மனுவுடன் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாகவும் மேற்படி எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்டு மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது 04.07.2023–ம் தேதி பிறந்த ஒருதலைபட்ச உத்திரவை ரத்து செய்யும்படி உத்திரவாக வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் இருக்கின்றது. அவ்வாறு இல்லாத பட்சத்தில் தனக்கு அநேக இன்னலும் ஈடு செய்ய இயலாத இழப்பும் ஏற்படக் கூடியதாக இருக்கின்றது. ஆகவே தாவா அசல் வழக்கில் 04.07.2023–ம் தேதி

தன் மீதும், தனது குழந்தைகள் மீதும் பிறந்த ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து அசல் வழக்கினை மீண்டும் கோப்பிற்கு எடுக்க உத்தரவிடவேண்டும் என்று மனுவில் கோரப்பட்டுள்ளது.

**<u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>:–**

3) இந்த மனுவின் எதிர்மனுதாரர் அசல் வழக்கின் வாதி ஆவார். மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு பொய்யனதாகும். மனுதாரருக்கு மனுவில் கோரியுள்ள பரிகாரங்கள் சட்டப்படி கிடைக்கத்தக்கதல்ல. இதனடியில் தெளிவாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் யாவும் பொய்யென்றும், உண்மைக்கு புறம்பானது என்றும் மறுக்கப்படுகிறது. உண்மையில் 1ம் மனுதாரரின் கணவர் தன்னைப்போன்று பல வெளிநபர்களிடம் கடன்கள் பெற்றுள்ளார். ஷை கடன் தொகையினை மனுதாரர்கள் செலுத்தாமல் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை கிரையம் போன்ற வில்லங்கங்கள் செய்துவிடவேண்டும் என்ற கெட்ட நோக்கத்துடன் இருந்து வருகின்றனர். மேலும் மனுதாரர் தனது மனுவில் குழந்தைக்கு உடல்நலம் சரியில்லாமல் போய்விட்டது என்று மேலோட்டமாக கூறியுள்ளார். மனுதாரர் வேண்டுமென்றே வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட நோக்கத்துடன் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் வேண்டுமென்றே விட்டுவிட்டு தற்போது சரியான காரணம் எதுவும் கூறாமல் பொய்யான விவரங்களை கூறி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும் எனவே மனுதாரர்கள் தாக்கல் செய்த இந்த மனுவானது சட்டப்படியும் நியாயப்படியும் நிலைநிற்கதக்கதல்ல என்றும் எனவே மனுதாரர்களின் இந்த மனுவினை எதிர்மனுதாரரின்

செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று எதிர்உரையில் கோரப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியமோ, ஆவண சாட்சியமோ இல்லை.

<u>பிரச்சினைக்கான தீர்வு</u>:–

6)தாவா அசல் வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக கடந்த 04.07.2023–ம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைப்பட்ச உத்தரவு(Ex–parte)–யை ரத்து செய்து உத்தரவிடவேண்டி மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9, விதி 7 மற்றும் பிரிவு 151 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) மனுதாரர் தரப்பில், அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இறுதியாக 04.07.2023–ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ள சமயத்தில் தனது குழந்தைக்கு உடல்நலம் சரியில்லாமல் போனதால் வெளிமாநிலத்தில் தனது உறவினர் உதவியுடன் மருத்துவ சிகிச்சை அளித்து வந்ததால் தனது வழக்கறிஞரை தொடர்பு கொள்ள இயலவில்லை என்றும், தற்போது தாவா வழக்கு சம்மந்தமாக வேறு வழக்குரைஞர் மூலம் விசாரித்து பார்த்ததில் தாவா அசல் வழக்கில் 04.07.2023–ம் தேதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தங்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பித்துள்ளதாக கூறியதாகவும் ஆகவே இந்த தாவா மனுவுடன் எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளதை ஏற்றுக்கொண்டு அசல்

வழக்கில் மனுதாரர்களுக்கு எதிராக கடந்த 04.07.2023–ம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து அசல் வழக்கினை மீண்டும் கோப்பிற்கு எடுக்க வேண்டும் என்று வாதிடப்பட்டது.

8) எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்கள் பொய்யானவை என்றும், மனுதாரர் தனது மனுவில் குழந்தைக்கு உடல்நலம் சரியில்லாமல் போய்விட்டது என்று மேலோட்டமாக கூறியுள்ளார் என்றும் மனுதாரர் வேண்டுமென்றே வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட நோக்கத்துடன் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் விட்டுவிட்டு தற்போது சரியான காரணம் எதுவும் கூறாமல் பொய்யான விவரங்களை கூறி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே மனுதாரர்களின் இந்த மனுவினை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று வாதிடப்பட்டது.

9) இருதரப்பு வாதம் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கு என்பது வாதிக்கு பிரதிவாதிகள் தொகை செலுத்த கோரி வாதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும்.இந்த அசல் வழக்கானது இந்நீதிமன்றத்தில் 03.02.2023–ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய 20.04.2023, 02.06.2023, 19.06.2023, 26.06.2023 மற்றும் 04.07.2023 ஆகிய தேதிகள் வாய்தா கொடுக்கப்பட்ட நிலையில் கடைசியாக 04.07.2023–ம் தேதி பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு வாய்தா போடப்பட்ட நிலையில் பிரதிவாதிகள் தரப்பில் யாரும் ஆஜராகாத காரணத்தினால் 04.07.2023–ம் தேதி இந்த மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக

ஒருதலைபட்ச உத்தரவு (Exparte) பிறப்பிக்கப்பட்டு அசல் வழக்கானது ஒருதலைபட்ச சாட்சியத்திற்காக 12.07.2023ம் தேதியில் இருந்து 12.03.2024ம் தேதி வரை நிலுவையில் இருந்து வந்துள்ளதாக காணமுடிகிறது.

10)தற்போது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் ஒருதலைப்பட்ச உத்தரவை(Exparte) ரத்து செய்யக்கோரி இம்மனுவை 12.03.2024-ம் தேதியன்று தாக்கல் செய்துள்ளார். 04.07.2023-ம் தேதி 1ம் மனுதாரரின் குழந்தைகளுக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் வெளிமாநிலத்திற்கு சிகிச்சைக்கு சென்றதாக சொல்லப்பட்ட நிலையில் அதற்கான ஆவணங்கள் எதுவும் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. அசல் வழக்கானது வாதிக்கு பிரதிவாதிகள் தொகை செலுத்த கோரி வாதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்பதாலும், மனுதாரர்களுக்கு அவரது தரப்பு வழக்கை நிரூபிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கவேண்டியது நீதியின் நலன் பால் அவசியமான ஒன்றாகும். அதே சமயம் மனுதாரர்களுக்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு பல்வேறு வாய்தாக்கள் கொடுக்கப்பட்ட நிலையிலும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் காலம் கடத்தி வந்துள்ளதாக காணமுடிகிறது. இந்த மனுதாரர்களின் செயலால் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள கால விரயத்தை உரிய செலவுத் தொகை செலுத்த உத்தரவிட்டு, அந்த நிபந்தனையின் பேரில் மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்து, இப்பிரச்சினைக்கு அவ்வாறே தீர்வு காணப்படுகிறது.

11)முடிவாக, மனுதாரர்கள், எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகையாக ரூ.2000/-ஐ (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)

12.07.2024–ம் தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் எனவும், தவறினால் மனு தள்ளுபடி செய்யப்படும் எனவும் உத்தரவிடப்படுகிறது. மனு அழைக்க 15.07.2024.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 05–ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K JEYAKUMAR Digitally signed by K JEYAKUMAR

**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**விருதுநகர் மாவட்டம்,**
**(இ)ஸ்ரீவில்லிபுத்தூர்.**

<u>உபய தரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள் :–</u> – இல்லை–

K JEYAKUMAR Digitally signed by K JEYAKUMAR

**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**விருதுநகர் மாவட்டம்,**
**(இ)ஸ்ரீவில்லிபுத்தூர்.**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்
இ.ம.எண்.2/2024
இன்
அசல் வழக்கு எண்.38/2023
செவ்வை–வரைவு உத்தரவு
நாள் 05.07.2024